# பரிசுத்த பவுல் ஆலயம் - குவைத்

# அஹமதி தமிழ் திருச்சபை





## மாத இதழ்

ஏப்ரல் 2013

மலர் 13

இதழ் : 12



# இயேசு

## இங்கே இல்லை,

# அவர் உயிர்த்தெழுந்தார்

லூக். 24:6

# உங்கள் சகோதரர் சிந்தனையில்



கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே! உயிர்த்தெழுந்த இரட்சகர் இயேசுவின் நாமத்தில் வாழ்த்துக்கள். தேவனுடைய பெரிதான கிருபையினால் 2013 —ம் வருடத்தின் ஏப்ரல் மாதத்தில் பிரவேசிக்கும் பாக்கியத்தை தேவன் நமக்கு தந்ததற்காய் அவருக்கு உள்ளத்தின் ஆழத்திலிருந்து ஸ்தோத்திரங்களை செலுத்துகிறேன். அதுமாத்திரமல்ல கடந்த மாதம் நடைபெற்ற சபையின் ஆராதனைகள், ஊழியங்கள், விஷேசமாக குறுத்தோலை ஞாயிறு, பெரிய வெள்ளி, உயிர்த்தெழுந்த ஞாயிறு ஆராதனைகளில் தேவ மகிமையை உணர முடிந்தது. அநேகருக்கு ஆசீர்வாதமாய் இருந்தது.

ஒவ்வொரு செவ்வாய்க் கிழமைகளிலும் நடைபெறும் வேத பாடம் அநேகருக்கு பிரயோஜனமாக இருக்கிறது. இதில் கலந்து கொள்ள சபையோர் யாவரையும் அன்புடன் அழைக்கிறேன். சத்தியத்தை அறிந்து கொள்ளக் கிடைத்த தருணங்களை பயன்படுத்தும்படி அன்புடன் கேட்டுக் கொள்ளுகிறேன். இந்த மாதம் சபையின் மூலம் நடைபெறும் ஊழியங்கள், ஆராதனைகள் மற்றும் BASEMENT எடுக்கும் முயற்சிகள் யாவற்றிற்காகவும் ஜெபித்துக் கொள்ளுங்கள். பாவங்களையும் மரணத்தையும் ஜெயித்து உயிர்த்தெழுந்த இயேசு சொல்கிறார் **““ஒருவன் எனக்கு ஊழியஞ் செய்கிறவனானால் என்னை பின்பற்றக்கடவன். நான் எங்கே இருக்கிறேனோ; அங்கே என் ஊழியக்காரனும் இருப்பான். ஒருவன் எனக்கு ஊழியம் செய்தால் அவனை பிதாவானவர் கனம் பண்ணுவார்””** (யோவா. 12:26).

தேவனுக்கு ஊழியம் செய்கிறேன் என்று சொல்லி அநேகருக்கு விருப்பம் உண்டு. அதன் முதல்படி இயேசுவை பின்பற்ற வேண்டும். உலகத்தோடு ஒத்த வேஷம் தரிக்காமல் வேறு பிரிக்கப்பட்ட ஒரு வாழ்க்கை, பவுலை போல உள்ள ஒரு வாழ்க்கை 1கொரி.10:23 — ன்படி **““எல்லாவற்றையும் அனுபவிக்க எனக்கு அதிகாரமுண்டு ஆகிலும் எல்லாம் தகுதியாயிராது””** என்ற எண்ணம் வரவேண்டும். இப்படிப்பட்ட வாழ்க்கை ஒரு வேறு பிரிக்கப்பட்ட வாழ்க்கை மனுஷ முயற்சியால் இந்த உலகத்தில் வாழ முடியாது. இதற்கு கீழ்க்காணும் காரியங்கள் நம் வாழ்க்கையில் நடந்திருக்க வேண்டும்.

1. மனந்திரும்புதல்: — நமது விருப்பப்படி போய்க் கொண்டிருந்து, செயல்களிலிருந்து, நின்று, தேவன் பக்கமாய் திரும்ப வேண்டும். நமது விருப்பங்களை நம்மால் விட முடியாது. ஆனால் தேவனுக்கு நேராக திருப்ப முடியும்.

2. பாவ மன்னிப்பு: — தேவனிடம் நம்முடைய நிலையை ஒத்துக் கொள்ள வேண்டும். எல்லா பாவங்களையும்,தவறுகளையும் செய்துவிட்டேன், அதைவிட்டுவிட விரும்புகிறேன். எனக்கு மன்னியும், நான் வேறு பிரிக்கப்பட்ட வாழ்க்கை வாழ விரும்புகிறேன் என்று நாம் ஒத்துக் கொள்ளும் போது தேவன் தம்முடைய குமாரனுடைய இரத்தத்தால் நம்மை கழுவுகிறார். இது வரை செய்து வந்த பாவ அழுக்கை கழுவுகிறார்.

3. ஞானஸ்நானம்: — இது அவரோடு ஒரு உடன்படிக்கை. இனிமேல் ஒரு புது மனிதனாக வாழ்வேன் என்கிற தீர்மானம்.

மெய்யாகவே இயேசு தேவனுடைய குமாரன் என்றார்கள். -மத். 27:54

4. பரிசுத்தாவியின் வரம்:— அவரோடு வாழ தீர்மானம் பண்ணும்போது பரிசுத்த ஆவியானவர் நம்மை நிறைத்து பரிசுத்த வாழ்க்கை அல்லது வேறு பிரிக்கப்பட்ட வாழ்க்கை வாழ உதவி செய்கிறார். பரிசுத்த ஆவியின் அபிஷேகம் எப்போதும் நாம் வேறு பிரிக்கப்பட்ட வாழ்க்கை வாழ்கிறோமா! என்று நம்மை ஆராய்ந்து பார்க்க உதவி செய்கிறார்.

நாம் ஒவ்வொருவரும் இப்படிப்பட்ட வேறு பிரிக்கப்பட்டு வாழ தேவன் நமக்கு கிருபை செய்வாராக. புதிய வகுப்புகளுக்குள் பிரவேசிக்கும் நமது சபையின் பிள்ளைகளுக்கு தேவன் புதிய கிருபையையும், ஆசீர்வாதத்தையும் தந்து ஆசீர்வதிப்பாராக.

**கிறிஸ்துவுக்குள்**
**அன்பு சகோ. ரவிச்சந்திரன்**



## மார்ச் மாதக் கேள்விகளுக்கு பதில் எழுதியவர்கள்

Sis. லதா கிறிஸ்டோபர்
Sis. ஹேனா எசேக்கியேல்
Sis. ஜெபா
Sis. ஷர்மிளா ஸ்ரீனிவாசன்
Sis. பத்மினி வர்க்கீஸ்
Sis. லைசா பொன்னையன்
Sis. பிரியா பிரேம்குமார்
Sis. செலின் டேவிட்
Sis. மெர்லின் ஜோன்ஸ்
Sis. ஜீனா சதீஷ்குமார்
Sis. சுகந்தி தம்புகுமார்
Bro. அருள்மணி
Bro. ஆரோக்கியராஜ்
Bro. தர்மர்
Bro. ஆல்பர்ட்
Bro. ரவி ஜாண் பீட்டர்
Sis. ஜோன் அசோக்
Sis. ராதா இவாஞ்சலின்
Sis. கீதா ஜெயக்குமார்
Sis. மரகதம் ஸ்டீபன்
Sis. அனிதா ஆரோக்கியதாஸ்
Sis. சாந்தி ஸ்ரீனிவாசன்
Sis. மெர்ஷெலின் ஏசுரெத்தினம்
Sis. ஜரின் ஃபிரிடா சிங்
Sis. டாப்னி ஜெபசிங்
Sis. குமுதினி வில்சன்
Bro. ரெமி ஜார்ஜ்
Bro. லாசர் ராஜாமணி
Bro. இம்மானுவேல்
Bro. ஜாண்சன்
Bro. ஜாண்

## சபையின் 2013-ம் ஆண்டின் வாக்குத்தத்தம்

# “பாவம் உங்களை மேற்கொள்ள மாட்டாது”

ரோமர். **6:14**

காவலாளர் அவனுக்குப் பயந்ததினால் திடுக்கிட்டுச் செத்தவர்கள் போலானார்கள். மத். 28:4



# இனி மரணம் இல்லை

**தேவ செய்தி**

இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலால் மனுக்குலத்திற்கு கிடைத்த மிகப் பெரிய இரட்சிப்பு என்னவென்றால் மரணத்தின் மீது மனிதனுக்கு கிடைத்த வெற்றியே ஆகும். ஆம், ஆண்டவர் பாடுபட்டு மரித்து பின்பு மூன்றாம் நாளில் உயிரோடு எழும்பி மனுமக்களுக்கு தன்னை வெளிப்படுத்திய பிறகு நடைபெற்ற முதலாவது அற்புதம் **""பிறவி முடவன் சுகமடைந்தது""** ஆகும். பேதுருவும் யோவானும் நசரேயனாகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே எழுந்து நட என சொன்ன அதே வினாடியில் பிறவி முடவன் சுகமடைந்தான். நீங்கள் எந்த வல்லமையால் இதை செய்தீர்கள் என இயேசுவை சிலுவையில் அறைந்த பிரதான ஆசாரியரும், சதுசேயர்களும், தேவாலயத்து சேனை தலைவர்களும் கேட்டபோது சீடர்கள் தைரியமாக சொன்னார்கள்.

உங்களால் சிலுவையில் அறையப்பட்டவரும் தேவனால் மரித்தோரிலிருந்து எழுப்பபட்டவருமாயிருக்கிற நசரேயனாகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலேயே இவன் உங்களுக்கு முன்பாக சொஸ்தமாய் நிற்கிறானென்று சொன்னார்கள். ஆம் பிரியமானவர்களே! இன்றைக்கும் இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலின் வல்லமை நம்மிடம் கிரியை செய்கிறது மட்டுமல்ல, அந்த வல்லமை நம்மையும் நம்முடைய ஆவி ஆத்துமா சரீரத்தையும் உயிரடையச் செய்கிறது. அல்லேலூயா! நம் தேவன் எத்தனை கிருபையுள்ளவர் பார்த்தீர்களா? பிசாசு நம் ஆவி, ஆத்துமா, சரீரத்திற்கு மரணத்தை பரிசளித்தான் ஆனால் இயேசு கிறிஸ்துவோ தம்முடைய மரணத்தினாலே மரணத்தை வென்று தன்னுடைய உயிர்த்தெழுதலினாலே நமக்கு உயிர்மீட்சியை பெற்றுத் தந்தார். எப்படி இயேசு கிறிஸ்து நம் ஆவி ஆத்துமா சரீரத்திற்கு உயிர் மீட்சியை கொடுத்தார் என இப்போது பார்க்கலாம்.

ஆவியின் உயிர் மீட்சி:— 1பேது. 4:6 —ல் மரித்தோரானவர்கள் மனுஷர் முன்பாக மாம்சத்திலே ஆக்கினைக்குள்ளாக்கப்பட்டிருந்தும் தேவன் முன்பாக ஆவியிலே பிழைக்கும் படியாக அவர்களுக்கும் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டது. பிரியமானவர்களே இதன் அர்த்தம் என்னவென்றால் 1பேது. 3:19 —ல் தெளிவாக சொல்லப்பட்டிருக்கிறது. நோவாவின் காலத்தில் மரித்தவர்களுடைய ஆவி காவலில் அடைக்கப்பட்டிருந்த இடத்திற்கு இயேசு மரித்ததற்கும் உயிர்த்தெழுந்ததற்கும் இடைப்பட்ட முன்று நாட்களில் சென்றார். எதற்காக போனார்? கீழப்படியாமற் போனவர்கள் வாழ்வடையும்படி சுவிசேஷத்தை பிரசங்கிக்கப் போனார். கடவுளாகிய நான் உங்கள் ஆவிக்காகவும் இரத்தம் சிந்தி மரித்தேன். இதன் மூலம் உங்கள் ஆவிக்கும் ஒரு உயிர்மீட்சி உண்டு. விசுவாசித்து நித்திய ஜீவனை சுதந்தரித்து கொள்ளுங்கள் என பிரசங்கிக்க சென்றார். அதுதான் இயேசுவின் அன்பு. நோவாவின் காலத்தில் கீழ்ப்படியாமல் சிறைபட்டு கிடந்த ஆவிகள் மீது கரிசனையுள்ள ஆண்டவர் நம்முடைய ஆவியும் நித்திய ஜீவனை சுதந்தரித்து கொள்ள எவ்வளவு கரிசனையுள்ளவராய் இருப்பார். ஆகவே என் அன்பு சகோதர! சகோதரிகளே! நாம் இயேசு கிறிஸ்துவுக்கு நன்றி சொல்வோமா! மரித்தவர்களுக்கு கிருபை பாராட்டுகிற இயேசு கிறிஸ்து உயிரோடிருக்கிற நமக்கு தமது இரக்கத்தை காண்பிப்பது எத்தனை நிச்சயம். ஆகவேதான் வேதம் கூறுகிறது **""ஒருவரும்**

அவர்கள் ஏறிட்டுப்பார்க்கிறபோது; அது தள்ளப்பட்டிருக்கக் கண்டார்கள். மாற். 16:4

**கெட்டுபோகாமல் எல்லாரும் மனந்திரும்ப வேண்டுமென்று விரும்பி நம்மேல் நீடிய பொறுமையுள்ளவராயிருக்கிறார்""** (2பேது. 3:9), அல்லேலூயா.

ஆத்தும உயிர் மீட்சி:— ஆத்தும மரணம் என்பது மிகவும் கொடுமையானது. அது நித்திய நித்திய காலமாய் நிலைத்திருக்கக் கூடிய மிக மோசமான நிலையாகும். இந்த ஆத்தும மரணம் ஒரு மனிதனுக்கு நேரிடக் கூடாது என்று இயேசு கிறிஸ்து விரும்புகிறார். அதிக கவனத்தோடு வேதாகமத்தில் பல இடங்களில் சொல்லி எச்சரிக்கிறார். லூக். 12:20 —ல் பல சொத்துக்களையும் பொக்கிஷத்தையும் சேர்த்து வைக்க விரும்பின ஒரு மனிதனை பார்த்து ஆண்டவர் கேட்டார் மதிகேடனே இன்று உன் ஆத்துமா உன்னை விட்டு எடுத்து கொள்ளப்படும் என்றால், நீ சேகரித்து வைத்தவைகள் யாருடையதாகும் என கேட்டார். **""மாம்ச சிந்தை மரணம் ஆவியின் சிந்தையோ ஜீவனும் சமாதானமுமாம்""** (ரோம.8:6). பிரியமானவர்களே! உலக பிரகாரமான சொத்து, சதந்தரம், அழகு, புகழ், பெருமை எதுவாக இருந்தாலும் இவைகள் மீது கவனம் வைக்காதீர்கள். மாறாக ஆவியின் சிந்தையாகிய மனத்தாழ்மை, தயவு, மன்னிப்பு போன்ற உயர்வான காரியங்களை தெரிந்து கொள்ளுங்கள். அப்போது ஆத்துமா மரணம் அடையாது. **""பாவத்தின் சம்பளம் மரணம். தேவனுடைய கிருபை வரமோ நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினால் உண்டான நித்திய ஜீவன்""** (ரோமர் — 6:23). பிசாசுக்கு இடம் கொடாமல் பிசாசுக்கு எதிர்த்து நின்று மாம்சத்திற்கு இடம் கொடாமல் கோபம், வைராக்கியம், குறை சொல்லுதல், மூர்க்கம், பண ஆசை இவைகளை விட்டொழித்து இயேசுவை மாத்திரம் நோக்கி தியாகத்தோடே ஊழியம் செய்பவர்களுக்கு தேவன் ஆத்தும மரணத்தினின்று விடுதலை தருகிறார். ஆகவே பரிசுத்த ஆவியை பெற்றுக் கொள்ளுங்கள். ஆவியின் சிந்தையோடு வாழுங்கள். **""இயேசுவை மரித்தோரிலிருந்து எழுப்பினவருடைய ஆவி உங்களில் வாசமாயிருந்தால் கிறிஸ்துவை மரித்தோரிலிருந்து எழுப்பினவர் உங்களில் வாசமாயிருக்கிற தம்முடைய ஆவியினாலே சாவுக்கேதுவான உங்கள் சரிரங்களையும் உயிர்ப்பிப்பார்""** (ரோம. 8:11). இப்படி ஆவியின் சிந்தையோடு வாழ்ந்தால் மாம்சத்தின் சிந்தனையை மேற்கொள்ளலாம். அதுதான் ஆவிக்குரிய வாழ்வு (இயேசு கிறிஸ்துவுக்குள் நிலைத்திருக்கிற வாழ்வு). இயேசுவானவர் மரித்த பின்பு எழுந்திருந்தாரென்று விசுவாசிக்கிறோம் அப்படியே இயேசுவுக்குள் நித்திரையடைந்தவர்களையும் தேவன் அவரோடே கூட கொண்டு வருவார் (1தெச. 4:14) எத்தனை சந்தோஷம் நித்திய நித்திய காலமாய் ஆண்டவரோடே வாழ்ந்து ஆளுகை செய்யும் நிலை இதுவே நித்திய ஜீவன்.

சரீர உயிர் மீட்சி:— இயேசு கிறிஸ்து மரித்து உயிர்த்தெழுந்ததின் பிரதான நோக்கம் சரீர மரண பயத்தை மனிதனை விட்டு நீக்க வேண்டும் என்பதுதான். சாவை பார்த்து எல்லோருக்குமே ஒரு பயம் ஒரு கலக்கம். சாவை யாருமே விரும்புவதில்லை. ஆனால் பவுல் சொன்னார்**""மரணமே உன் கூர் எங்கே பாதாளமே உன் ஜெயம் எங்கே?"** (1கொரி. 15:55 — 56) அதற்கு காரணம் என்ன? பிலி. 1:21 —ல் இதற்கு விடையை சொல்கிறார் **""கிறிஸ்து எனக்கு ஜீவன், சாவு எனக்கு ஆதாயம்""**. அல்லேலூயா!

கிறிஸ்து நமக்கு ஜீவனாக இருக்கும் வரை மரணத்தைப் பார்த்து இயேசு போல நாமும் சவால் விடலாம், இயேசு சொன்னார் நானே வழியும் சத்தியமும்

ஜீவனுமாயிருக்கிறேன். ஆம் அவரே நம் ஜீவன், சாவு என்னை ஒன்றும் செய்ய முடியாது. **""உங்கள் சரீரத்தை மாத்திரம் கொலை செய்கிறவர்களுக்கு பயப்படவேண்டாம். உங்கள் ஆத்துமாவையும் சரீரத்தையும் நரகத்தில் தள்ள வல்லவருக்கே பயப்படுங்கள்""** என்று மத். 10:28 – ல் இயேசு சொல்லியிருக்கிறார். நமக்கு ஒரு நிச்சயம் உண்டு பிரியமானவர்களே. **""மரணத்துக்கு அதிபதியாகிய பிசாசானவனை தமது மரணத்தினாலே அழிக்கும்படிக்கும் ஜீவ காலமெல்லாம் மரண பயத்தினாலே அடிமைதனத்திற்குள்ளானவர்கள் யாவரையும் விடுதலை பண்ணும்படிக்கும் அப்படியானார்""** (எபி. 2:14). இயேசு தாமே மரணத்தின் வழியாய் சென்று அதை வென்றார் மரணத்தின் அதிகாரியாகிய பிசாசின் தலையை நசுக்கி சாத்தானை மேற்கொண்டார். அதே ஜெயத்தை நமக்கு சுதந்திரமாக கொடுத்திருக்கிறார். அல்லேலூயா!

**""தேவனால் பிறப்பதெல்லாம் உலகத்தை ஜெயிக்கும். நம்முடைய விசுவாசமே உலகத்தை ஜெயிக்கிற ஜெயம்""** (1யோவா. 5:45) ஆகவே ஜெய கர்த்தர் நம்மில் வாழ்ந்து கொண்டிருப்பதால் நாமும் மரணத்தையும் பிசாசையும் உலகத்தையும் ஜெயித்தவர்களாய் மாறுகிறோம்.**""நானே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருக்கிறேன்என்னை விசுவாசிக்கிறவன் மரித்தாலும் பிழைப்பான்""**(யோவா.11:25).**""உலகத்தில் உங்களுக்கு உபத்திரவம் உண்டு ஆனாலும் திடன் கொள்ளுங்கள் நான் உலகத்தை ஜெயித்தேன்""**(யோவா – 16:33)""மரித்தேன் ஆனாலும் இதோ சதாகாலங்களிலும் உயிரோடிருக்கிறேன் ஆமென். நான் மரணத்திற்கும் பாதாளத்திற்குரிய திறவுகோலை உடையவராயிருக்கிறேன்.(வெளி – 1:18) மரணத்தையம் பாதாளத்தையும் ஜெயித்த இயேசு கிறிஸ்து தாமே உங்கள் ஒவ்வொருவருக்கும் அதே ஜெயத்தை சுதந்தரமாக கொடுத்து உங்கள் ஆவி,ஆத்துமா,சரீரம் ஆகியவற்றை என்றென்றைக்கும் ஜீவிக்கிற நித்திய ஆசீர்வாதத்தை கிருபையாக தந்தருள்வாராக.**""நான் மரண இருளின் பள்ளத்தாக்கில் நடந்தாலும் பொல்லாப்புக்கு பயப்படேன் தேவரீர் என்னோட கூட இருக்கிறீர் உமது கோலும் உமது தடியும் என்னை தேற்றும்""** (சங். 23:4) ஆமென்.

**கிறிஸ்துவின் பணியில்**
**சகோ. ஸ்டாலின்**

# CHILDREN THOSE WHO WROTE ANSWERS

Raeshma

Sharon Grace

Sharon Keerthana

Jessly

Lydia. A

Joseph Prince

Helen Prarthana

Geona Shamy

Sarah

Jainy

Roshan

அவர் உயிரோடிருக்கிறாரென்றும் அவளுக்குக் காணப்பட்டார். –மாற். 16:11

# LIVING GRACE

Romans 6:14 says **"For sin shall not have dominion over you: for ye are not under the law but under grace"**. It is not a hopeless struggle in which the believer is engaged, but the one in which victory is assured. It is joyful confidence to know that the power of sin has been effectively broken and the triumph of holiness has been secured by our lord.

The law is able to do many things: it commands, demands, rebukes, condemns, restrains, and even points away from itself to another. There is however, one thing the law can never do. It cannot save. Gal. 2:16 says **"By work of law will no flesh be justified"** .

But God has brought about a solution. With reference to Galatians 3: 10-14, it is known that **"by God's grace,** Christ has redeemed us from the curse of the law, having become a curse for us". And truly **"there is no condemnation for those who are in Christ Jesus"** (Romans 8:1). By accepting the Son of God's death for our sins on the Cross as the only means of our acceptance before God, we are accepting the way of grace. And grace not only saves us, it empowers us. In Christian discipleship, the ethical imperatives are based on our new life relationship with Christ. But God grants grace day by day that we might walk in His will, in obedience to Him.

God created birds to fly freely in the sky but many are caged with clipped feathers. Many people who profess that they are Christ's men and women are like those caged eagles. The irony is that it is a cage with open doors. Through Christ, we have been set free! we were never meant to be imprisoned in a cage.

CONCLUSION:- We may be feeling that sin has its grip on us and we are bound to fail. Paul says don't be discouraged and don't despair; sin will not master us if we will simply receive the daily living grace of God and present our self to Him and do what He wants us to do. Only in submitting our self to God, we can find the grace or power needed to live the life of righteousness that God has given for us.

**In Christ**
**Raeshma Ashok**

அவர்கள் புறப்பட்டுப்போய்; எங்கும் பிரசங்கம்பண்ணினார்கள். _மாற்.16:20

---

## சிரி.... சிந்தி

**உன் மனம் வலிக்கும் போது சிரி. பிறர் மனம் வலிக்கும் போது சிரிக்க வை.**

**- அஹமதி தமிழ் திருச்சபை**

# மேற்கொள்ளமாட்டாது

**""பாவம் உங்களை மேற்கொள்ளமாட்டாது""** (ரோம. 6:14) என்ற நம் சபையின் வாக்குத்தத்தமானது கிருபைக்கு கீழ்ப்பட்டிருக்கிறபடியால் பாவம் உங்களை மேற்கொள்ளமாட்டாது. நாம் கிருபையின் காலத்தில்தான் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். கிருபையின் காலம் என்பதினால் நாம் பாவம் செய்யலாம் என்று அர்த்தமல்ல. **""பாவத்தின் சம்பளம் மரணம்""** (ரோம. 6:23) பாவம் செய்கின்ற ஆத்துமா சாகும், பாவம் வாசற்படியிலே படுத்திருக்கும் என்றும் வேத வசனங்கள் நமக்கு விளங்கப்பண்ணுகிறது. ஆகவே சில எச்சரிப்பின் சத்தத்தை உங்கள் முன்வைக்கிறேன்.

1. **பாவத்தின் விளைவுகள்:—** பாவத்தின் பலன் நரகம். இன்று அநேகர் பாவத்திற்கு அடிமையாகியுள்ளனர். பாவத்தைக் குறித்தும், நீதியைக்குறித்தும், நியாயத்தைக்குறித்தும் இன்று பல சபைகளில் செய்தியின் வாயிலாக பேசப்படுவதேயில்லை. இத்தகைய செய்திகள் நாம் வாழுகின்ற இக்கடைசி காலத்திற்கு மிகவும் முக்கியமானதாகும். இன்று அநேக குடும்பங்களில் இச்சையின் ஆவி மனிதனின் இருதயத்திற்குள் புகுந்து குடும்பத்திற்குள் ஒருவித பிரிவினையின் ஆவியை உண்டுபண்ணுகிறது. தன் சொந்த மனைவியையோ, கணவனையோ, பிள்ளைகளையோ நேசிக்க முடியாமல் செய்கிறது. அந்த அளவிற்கு பாவம் மனிதனின் கண்களை மறைத்து சுபாவ அன்பில்லாமல் செய்கிறது. நாம் கிருபையின் காலங்களில் வாழ்கின்றோம் என்று நினைத்துக் கொண்டு மேன்மேலும் பாவம் செய்கிறவர்களாய் இருப்போமானால் தேவனுடைய கோபத்திற்கு, ஆக்கினைக்கு நாம் எப்படி தப்பித்துக் கொள்ளமுடியும்! அறிந்தும் செய்கிறவர்கள் அநேக அடிகளால் அடிக்கப்படுவார்கள் என்று வேதம் நம்மை எச்சரிக்கிறது. நாம் எதை விதைக்கிறோமோ அதையே அறுக்கவும் நேரிடும். எனவே பாவத்தினால் ஏற்படும் விளைவினை அறிந்த நாம் பாவத்தைவிட்டு விலகி வாழ வேண்டியது மிகவும் அவசியம்.

2. **பரிசுத்தத்தால் பாவத்தை மேற்கொள்தல்:—** இயேசு கிறிஸ்துவின் இரத்தமே நம் சகல பாவங்களையும் நீக்கி சுத்திகரிக்கின்றது. யோசேப்பு தேவனுக்கு விரோதமாக நான் பாவம் செய்வதெப்படி! என்று கேட்கிறான். பாவத்திற்கு விலகி ஓடி பரிசுத்த வாழ்வினை வாஞ்சிப்பதை நாம் காண முடிகின்றது. ஜெபம், வேதம் இவ்விரண்டும் நம் வாழ்வின் இரு கண்களைப்போல் செயல்பட வேண்டும். தாமரை இலையின் மேல் நீர் ஒட்டுவது கிடையாது. கடல் நீர் உப்பாக இருந்தாலும் அதிலுள்ள மீன்களில் உப்புச் சுவை இருப்பதில்லை. அதைப்போலவே ஒளி வரும்போது இருள் விலகிப்போம். அவ்வாறே நாம் பரிசுத்தமாய் வாழும்போது பாவ வாழ்க்கை நம்மைவிட்டு அகன்றுபோம். பரிசுத்த வாழ்வினால் கிடைக்கும் பலன் நித்திய ஜீவன். தேவனின் ஆலயமாகிய இச்சரீரத்தை நாம் பரிசுத்தத்தோடு காப்பது நமது தலையாய கடமையாகும்.

3. **பரிசுத்த வாழ்வின் பலன்:— ""பரிசுத்தமாகுதல் உங்களுக்கு கிடைக்கும் பலன், முடிவோ நித்திய ஜீவன்""** (ரோம.6:22), பாவத்தின் பலன் நரகம். பாவம் நம்மை மேற்கொள்ளமாட்டாது என்ற வாக்குத்தத்தத்தைப் பெற்ற நாம் எவ்வாறு வாழ்ந்து கொண்டிருக்கின்றோம்! என்று நம்மை நாமே ஆராய்ந்து பார்ப்பது மிகவும் அவசியமானதாகும். பாவத்தை வெறுத்து பாவியை நேசிக்கும் இயேசுவின் முன்மாதிரியை நாம் பின்பற்றுகிறோமா! மனந்திரும்புகின்ற ஒரு பாவியின் நிமித்தம் பரலோகத்தில் மிகுந்த சந்தோஷமுண்டு என்ற வேத வாக்கின்படி நாம் ஆத்தும ஆதாயம் செய்ய நம்மை நாமே அர்ப்பணிக்கின்றோமா! ஆண்டவருக்காக நாம் என்ன செய்துள்ளோம்! ஏதேனும் ஒரு ஊழியத்தில் நாம் ஈடுபட்டிருக்கிறோமா! நம் தேசத்திற்காக, நம் சபைக்காக, உறவினர் போன்ற அனைவரின் இரட்சிப்புக்காக நாம் அனுதினமும் திறப்பின் வாசலில் நின்று கண்ணீரோடு ஜெபிக்க வேண்டும். பரிசுத்தத்தின் பலனை சுதந்தரிக்க வேண்டும். தேவன் நமக்கு தந்த வாக்குத்தத்த வசனத்தை நாம் அனுதினமும் சொல்லி ஆண்டவரிடம் ஜெபித்து அளவில்லாத ஆசீர்வாதத்தைப் பெற்று சீரும் சிறப்புமாக வாழ்வோமாக. கர்த்தரின் நாமத்திற்கே மகிமை உண்டாவதாக. ஆமென்.

**அன்புள்ள சகோதரி**
**பியூலா மெர்சி ஜெகநாதன்**

# QUIZ FOR CHILDREN

(Write the answers using the New King James Version. Children those who are studying above SECOND Standard can participate)

1. What did the angel of God tell Joseph to name the Virgin's son?
2. Which prophet told about the weeping due to the death of the children?
3. Who preached in the wilderness of Judea?
4. Why are the pure in the heart blessed?
5. Why did Jesus marvel?
6. What is the name of the tax collector who became the disciple of Jesus?
7. Which is the light of the body?
8. For whom does Jesus give rest?
9. Who shall be in the heart of the earth for 3 days and nights?
10. Which disciple walked on the water?

**Note:- ANSWERS can be taken from Matthew 1 to 14. Submit your answers to the Sunday School Teachers on or before 19.04.2013. Mention the reference along with the answers.**

## ANSWERS FOR THE QUIZ (March)

1. To impart some spiritual gift, To establish them & To be mutually encouraged (comforted) by each other's faith. – Rom. 1:10-13
2. If he is one inwardly. – Rom. 2:28-29
3. Righeous – Rom. 3:10
4. Through the law – Rom. 3:20
5. His own body, His age & The deadness of Sarah's womb. – Rom. 4:19
6. Baptism – Rom. 6:4
7. Exceeding sinful – Rom. 7:13
8. Them which are in Christ Jesus, Those who walk not after the flesh & Those who walk after the spirit. – Rom. 8:1
9. Conquerors – Rom. 8:37
10. Because they sought it not by faith. – Rom. 9:31-32

தம்முடைய கைகளை உயர்த்தி; அவர்களை ஆசீர்வதித்தார். -லூக். 24:50

# இந்த மாதம் பிறந்த நாளை சிறப்பிக்கிறவர்கள்

- செல்வி. ஜோஸ்லின் மோனி பிரேம்குமார்
- செல்வி. லிடியா வில்கின்ஸ்
- செல்வி. ஆம்ரிஸ் விஜெய்தா மனோகரன்
- செல்வி. ரெபேக்கா ஈஸ்டர்ராஜ்
- செல்வி. வின்சி டேவிட்
- செல்வி. குமாரி ராஜன்
- செல்வி. பிரிஸி புளோரா ஜஸ்டஸ்
- செல்வி. ரீனி ரேய்ச்சல் வில்சன்
- செல்வி. சாரோன் கீர்த்தனா கிறிஸ்டோபர்
- செல்வி. சோமா மேரி வேளாங்கண்ணி
- செல்வி. லாவண்யா ஜசக்துரை
- செல்வி. ஹான்ஸிகா சாம் ஆனந்த்
- செல்வி. இபிஜா ஏஞ்சல் ஜெயக்குமார்
- செல்வன். ஜெரால்டு ஜெஸ்டின்
- செல்வன். ஆன்டர்சன் அறிவுச்சுடர்
- செல்வன். மோசே சத்தியநாதன்
- செல்வன். விமல் டேவிட்
- செல்வன். நித்யா செல்வகுமார்
- சகோதரி. பூங்கோதை ரெத்தினம்
- சகோதரி. வசந்தா செல்வராஜ்
- சகோதரி. ஜரின்சில்வியா ஆல்பர்ட்
- சகோதரி. சோபியா ஜோசப்
- சகோதரி. கலாராணி ஜெயக்குமார்
- சகோதரி. விஜயகுமாரி சுந்தர்ராஜ்
- சகோ. டென்சிங்
- சகோ. டேனியல்
- சகோ. செல்வகுமார்
- சகோ. ரிச்சர்ட்சன் டேனியல்
- சகோ. ஃபிராங்கிளின்
- சகோ. ஜோசப் பீட்டர்
- சகோ. ஜோசப் பாபுராஜ்
- சகோ. சுகுமார்
- சகோ. அல்போன்ஸ் விஸ்வநாதன்
- சகோ. குமாரசாமி
- சகோ. ஜார்ஜ்
- சகோ. பால் ஜெகநாதன்
- சகோ. முரளி
- சகோ. ஆல்வின் பென்னி
- சகோ. ரவி ஜாண் பீட்டர்
- சகோ. ஆல்பர்ட் ஸ்வாமிதாஸ்
- சகோ. ஜாண்சன். N
- சகோ. ஜோசப். M
- சகோ. கனிஷ் ஜோஸ்வா
- சகோ. சந்தோஷ் ராமமூர்த்தி
- சகோ. ஜாண் பீட்டர்
- சகோ. சாலொமோன்



நீ என்னைப் பின்பற்றிவா என்றார். _யோவா. 21:22

# ஏப்ரல் 2013 ஆலய ஆராதனைகள்

ஞாயிறு ஆராதனை மாலை 5:00 முதல் 6:15 வரை

| நாள் | செய்தி |
|---|---|
| 07-04-2013 | **சகோ. அற்புதராஜ்** |
| 14-04-2013 | **சகோ. கிறிஸ்டோபர்** |
| 21-04-2013 | **சகோ. செல்வகுமார்** |
| 28-04-2013 | **சகோ. ஐசக்துரை** |

வெள்ளி ஆராதனை மாலை 4:40 முதல் 6:20 வரை

| நாள் | நடத்துபவர் | செய்தி |
|---|---|---|
| 05-04-2013 | HARVEST FESTIVAL | |
| 12-04-2013 | **சகோ. டேவிட்குமார்** | **சகோ. ரவிச்சந்திரன்** |
| 19-04-2013 | **உபவாச திருவிருந்து ஆராதனை** | |
| 26-04-2013 | **குடும்ப ஆராதனை** | |

சங்கிலி தொடர் ஜெபம்: 04-04-2013 மாலை 6 மணி முதல் காலை 6 வரை

முழு இரவு ஜெபம்: 11-04-2013 இரவு 10 pm முதல் காலை 2 am வரை

**செய்தி :- PS. டேனியல் மோசஸ்**

பெண்கள் கூடுகை: 24.4.2013, Sis. ஜோான் அசோக்குமார் இல்லம், அபுகலிஃபா.

வாலிபர் கூடுகை: 26.4.2013, Br. பிரேம்குமார் இல்லம், மங்காஃப்

## இந்த மாதம் திருமண நாளை சிறப்பிக்கிறவர்கள்

- திருமதி & திரு. அல்போன்ஸ் விஸ்வநாதன்
- திருமதி & திரு. ரிச்சர்ட் சாலொமோன்
- திருமதி & திரு. ஸ்டீபன்
- திருமதி & திரு. அருண் இம்மானுவேல்
- திருமதி & திரு. பால் டேனியல்
- திருமதி & திரு. டென்சிங்
- திருமதி & திரு. ஸ்ரீனிவாசன் ராகவன்



அவர்களை விட்டுப் பிரிந்து; பரலோகத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்டார். . -லூக். 24:51

# அப். பிலிப்பின் இரத்த சாட்சி

அப்போஸ்தலனாகிய பலிப்பு பெத்சாயிதா பட்டணத்தைச் சேர்ந்தவர். பிலிப்பு என்ற சொல்லுக்கு குதிரை பிரியன் என்பது பொருள். பிலிப்பு என்ற சொல் கிரேக்க வார்த்தையாகும். இவர் யூத குடும்பத்தை சேர்ந்தவர். யூதனாகிய இவரது குடும்பத்தினர் கிரேக்கரோடு நெருங்கிய தொடர்பு வைத்திருந்ததால் இவருக்கு கிரேக்க பெயர் வைக்கப்பட்டது. இவர் இயேசுவின் பன்னிரண்டு சீஷரில் ஒருவராவார். இவர் பெத்சாயிதாவில் பிறந்து வளர்ந்து அந்திரேயா, பேதுரு ஆகியோரின் நட்பையும் பெற்றிருந்தார். பிலிப்பு ஆவிக்குரிய காரியங்களில் அதிக ஆர்வம் காட்டாதவர். இவர் இயேசு கிறிஸ்துவை தேடிப் போகவில்லை. இயேசுவே பிலிப்பை அழைத்தார். யோவா. 1:43 — ல் மறுநாளிலே இயேசு கலிலேயாவுக்குப் போக மனதாயிருந்து பிலிப்பை கண்டு நீ என்னை பின்பற்றி வா என்றார். பிலிப்பு ஒவ்வொரு காரியத்தையும் நன்றாக ஆராய்ந்து அறிகிறவராக இருந்தார். யோவானும் நாத்தான் வேலும் பிலிப்பின் நெருங்கிய நண்பர்கள். ஆகவே பிலிப்பை பற்றிய செய்திகளை யோவான் தனது சுவிசேஷத்தில் எழுதியுள்ளார். (அதாவது அப். 8:5 — 40, அப். 6:5 ஆகிய வசனங்களில் காணப்படும் பிலிப்பு வேறொரு தேவ ஊழியர் ஆவார். இவர் ஒரு நல்ல சுவிசேஷகனாக அபிஷேகம் பண்ணப்பட்டவர். ஒரு முறை காந்தகே அமைச்சர் நேரில் சென்ற போது அவனோடு சென்று நற்செய்தியை அறிவித்து அவனை மனந்திரும்பச் செய்தார். இவருக்கு தீர்க்கதரிசனம் சொல்லுகின்ற நான்கு மகள்கள் இருந்தார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது. இந்த பிலிப்பின் வீட்டில் தான் அப். பவுல் பல முறை தங்கியிருந்திருக்கிறார்.

அப்போஸ்தலராகிய பிலிப்பு எந்த காரியத்தையும் கண்டு ஆராய்ந்து விசுவாசிப்பவர். இதனால் இயேசுவும் ஒரு முறை பிலிப்பை ஆராய்ந்து பார்த்தார். யோவா. 6:5 — 7 — ல் இயேசு தம்முடைய கண்களை ஏறெடுத்து திரளான ஜனங்கள் தம்மிடத்தில் வருகிறதை கண்டு பிலிப்பை நோக்கி இவர்கள் சாப்பிடத்தக்க அப்பங்களை எங்கே கொள்ளலாம் என்று கேட்டார். தாம் செய்யப் போகிறதை அறிந்திருந்தும் பிலிப்பை சோதிக்கும்படி இப்படி கேட்டார். பிலிப்பு அவருக்கு பிரதியுத்தரமாக இவர் களில் ஒவ்வொருவனும் கொஞ்சம் கொஞ்சம் எடுத்துக் கொண்டாலும் இருநூறு பணத்திற்கு அப்பங்களும் இவர்களுக்கு போதாதே என்றான். இயேசு செய்த எத்தனையோ அற்புதங்களைக் கண்டிருந்த பிலிப்பு இயேசு இந்த அற்புதத்தையும் செய்யக் கூடியவர் என்று நினைக்கவில்லை. உடனே கணக்குப் பார்க்கத் துவங்கிவிட்டார். மேலும் ஒருமுறை எருசலேம் சுற்றுப்புற எல்லைகளிலிருந்து திரளான ஜனங்கள் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் புகழ் பெற்ற போதனையைக் கேட்க கூடிவந்திருந்தார்கள். அப்பொழுது கிரேக்கர்கள் இயேசுவை காண விரும்பினார்கள். அப்பொழுதும் கிரேக்கர்கள் கிரேக்கரோடு தொடர்புடைய பிலிப்புவையே சந்தித்துக் கேட்டார்கள். ஆனால் பிலிப்பு அவர்களை இயேசுவிடம் நேரடியாக அழைத்துச் செல்லவில்லை. ஏனென்றால் கிரேக்கர்கள் யூதர்களல்ல. இவர்கள் சமாரியர்களைவிட குறைந்தவர்கள், அதாவது புற இனத்தவர்கள். ஆகவே பிலிப்புக்கு சந்தேகம் வந்தது. வெளியாளை இயேசுவிடம் வழிநடத்தினால் இயேசு ஏற்றுக் கொள்வாரா என்று எண்ணி அப்.

அந்திரேயாவிடம் சென்று ஐடியா கேட்டார் என்று யோவா. 12:20 — 22 — ல் **""பண்டிகையில் ஆராதனை செய்ய வந்தவர்களில் சிலர் கிரேக்கர்கள் இருந்தார்கள். அவர்கள் கலிலேயா நாட்டு, பெத்சாயிதா நாட்டு ஊரானாகிய பிலிப்பினிடத்தில் வந்து, ஐயா இயேசுவை காண விரும்புகிறோம் என்று அவனை கேட்டுக் கொண்டார்கள். பிலிப்பு வந்து அதை அந்திரேயாவுக்கு அறிவித்தான், பின்பு அந்திரேயாவும் பிலிப்பும் அதை இயேசுவுக்கு அறிவித்தார்கள்""** என வேதத்தில் வாசிக்கிறோம். இயேசு கிறிஸ்து நேற்றும் இன்றும் என்றும் மாறாதவர். யாவர் மீதும் அன்புள்ளவர், அதனால்தான் யூதர்கள் வெறுத்த சமாரிய பெண்ணிடமே சொன்னார், பிதாவை எருசலேமில் மட்டுமல்ல உலகமெங்கும் தொழுது கொள்ளுகிற காலம் வந்திருக்கிறது என்று. அப். பிலிப்பு எதையும் ஆரா யும் தன்மையும், நிதானமும், உறுதியுமானவர். இராப்போஜனத்தின் போது இயேசுவை பார்த்து, ஆண்டவரே பிதாவை எங்களுக்கு காண்பியும் அது எங்களுக்குப் போதும் என்றனர். அதற்கு இயேசுவோ என்னைக் கண்டவன் பிதாவை கண்டான் என்று கூறி பிதாவுக்கும் தனக்கும் உள்ள ஐக்கியத்தை இயேசு உறுதிப்படுத்தினார்.

கர்த்தராகிய இயேசு கிறிஸ்து உயிர்த்தெழுந்து சுமார் 40 நாட்கள் சீஷர்களுக்கு தரிசனமாகி பரலோகத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்ட பிறகு அப். பிலிப்பு சைத்திரியாவுக்கு சென்று இருபது ஆண்டுகள் ஊழியம் செய்தார். இந்த இடம் ரஷ்யாவின் தென் பகுதியில் உள்ளது. இதன் பின்பு இவர் ஆசியாவின் மைனரிலுள்ள ஏராம் போலி என்ற பட்டணத்தில் வந்து தங்கி ஊழியம் செய்தார். பிலிப்பிற்கு இரண்டு மகள்கள் இருந்தார்கள். இருவருமே தீர்க்கதரிசன வரம் பெற்றிருந்தனர். இவர்கள் வாழ்வின் இறுதிவரை திருமணம் செய்யாமல் கன்னியராகவே வாழ்ந்தார்கள். இவர்களுடைய கல்லறை இப்பொழுதும் ஏராப்போலியில் இருக்கிறது. இங்குள்ள மக்கள் ஒரு பெரிய சர்ப்பத்தை கடவுளின் அவதாரமாக எண்ணி வழிபட்டு வந்தார்கள். இதைக்கண்ட பிலிப்பு தன் கையிலிருந்த சிலுவையை நீட்டி அந்த பாம்பு மறைந்து போகும்படி கட்டளையிட்டார். பலிபீடத்தின் அடியிலிருந்து வெளியே வந்த அந்த மிகப் பெரிய பாம்பு தனது விஷத்தை கூடியிருந்தவர்கள் மீது கக்கிவிட்டு இறந்துபோனது. பாம்பின் விஷம்பட்ட அநேகர் இறந்து போனார்கள். இதில் ராஜாவின் மகனும் மடிந்துபோனான். அப். பரிசுத்த பிலிப்பு இறந்துபோன அனைவரையும் இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால் உயிரோடே எழுப்பினார். இதில் ராஜாவின் மகனும் பிழைத்தான். அங்குள்ள அனைவருக்கும் நற்செய்தியையும் அறிவித்தான். ஆனால் பகைமையும் வெறுப்பும் அடைந்த மாநில துணை ஆளுநரும் அந்த சர்ப்பத்தின் மடாதிபதிகளும் பிலிப்பை பிடித்து உடைமையைகழற்றி அவனுடைய கணுக்கால்களிலும்தொடைகளிலும் துளையிட்டு, தலைகீழாக தொங்கவிட்டு கற்களால் அடித்துக் கொன்றார்கள்.

அப்போஸ்தலராகிய பரிசுத்த பிலிப்பு பிதாவே இவர்களை மன்னியும் என்ற ஜெபத்தோடு உயிரை விட்டார். அப்போது அப். பிலிப்பின் வயது 87. அப். பவுல் சொன்னது போல நல்ல போராட்டத்தை போராடினேன் ஓட்டத்தை முடித்தேன், இதுமுதல் நீதியின் கிரீடம் எனக்காக வைக்கப்பட்டிருக்கிறது. நீதியுள்ள நியாயாதிபதியாகிய கர்த்தர் அதை எனக்கு தந்தருளுவார். எனக்கு மாத்திரமல்ல அவர் பிரசன்னமாகுதலை

விரும்பும் யாவருக்கும் அதை தந்தருளுவார் என்றபடி அப்போஸ்தலராகிய பரிசுத்த பிலிப்பு விசுவாசமுள்ள இரத்த சாட்சியாக மரித்து அவருடைய கிரீடத்தை பெற்றுக் கொண்டார். அப். பிலிப்புவின் கல்லறை இன்றும் ஏராப்போலியில் காணப்படுகிறது. ஆனால் கி.பி 560 —ல் போப் ஆண்டவராக இருந்த புனித மூன்றாம் ஜாண் இவரது எலும்புகளை ரோம் நகருக்கு எடுத்துச் சென்று ஆலயமொன்றில் வைத்தார். இந்த ஆலயம் துவக்கத்தில் பரிசுத்த அப்போஸ்தலர்களான பிலிப்பு, யாக்கோபு ஆலயம் என்று அழைக்கப்பட்டது. தற்பொழுது இந்த ஆலயம் பரிசுத்த அப்போஸ்தலர்களின் ஆலயம் என்று அழைக்கப்படுகிறது. இங்கு பரிசுத்த அப்போஸ்தலராகிய பிலிப்புவின் எலும்புகள் பளிங்கு பீடம் ஒன்றில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளது.

**அன்புள்ள சகோதரன்**
**யேசுநாயகம்**

---

## பதில் சொல்லுங்க



(தயவு செய்து எல்லாவற்றிலும் அதிகாரம் மற்றும் வசனம் ஆகியவற்றை மறக்காமல் குறிப்பிடவும்)

1. மோசேயின் பிள்ளைகள் எத்தனை பேர்? அவர்கள் பெயர்கள் என்ன?
2. லாபான் யாக்கோபின் சம்பளத்தை எத்தனைமுறை மாற்றினான்?
3. கர்த்தர் மோசேக்கு நியாயபிரமாணத்தை எந்த மலையில் கொடுத்தார்?
4. கர்த்தர் யோசேப்பினிமித்தம் எந்த எகிப்தியன் வீட்டை ஆசீர்வதித்தார்?
5. மோசேயின் மாமன் எந்த தேசத்தான்?
6. யோசேப்பு தன் சகோதரர்களுக்கு தன்னை வெளிப்படுத்திய பொழுது பாசத்தின் மிகுதியால் என்ன செய்தான்?
7. பார்வோனிடம் பேசும்போது மோசே மற்றும் ஆரோனின் வயது என்ன?
8. நோவா காலத்தில் பூமி அழிக்கப்படும்போது எத்தனை நாட்கள் மழை பெய்தது?
9. மன்னாவை தலைக்கு எந்த அளவு எடுத்துக்கொள்ளும்படி தேவன் கட்டளை யிட்டார்?
10. ரெபெக்காளை அவள் சகோதரர்கள் எப்படியாய் வாழ்த்தினார்கள்?
11. மோசேயிடம் கர்த்தர் தம்முடைய பெயரை எப்படி குறிப்பிட்டார்?
12. உடன்படிக்கை பெட்டி எந்த மரத்தால் செய்யப்பட்டது? அதன் அளவுகள் என்ன?
13. யோசேப்புக்கு பார்வோன் கொடுத்த பதவியின் பெயரென்ன?
14. எபிரேய ஆண் குழந்தைகளைக் கொல்லாமல் உயிரோடே காப்பாற்றியது யார்?
15. ஆபிரகாம் எந்த தேசத்தில் அநேக நாள் தங்கியிருந்தான்?

குறிப்பு:- வேதாகமத்தில் ஆதியாகமம் மற்றும் யாத்திராகமம் ஆகிய ஆகமங்களில் பதிலைத் தேடுங்கள்; காணலாம். சரியான விடைகளை வரும் 19-04-2013 தேதிக்குள் சபையின் செயலாளரிடம் நேரில் கொடுக்கவும்.

# கற்றுக்கொள்ளுங்கள்

**""நான் சாந்தமும் மனத்தாழ்மையுமாய் இருக்கிறேன், என் நுகத்தைஉங்கள் மேல் ஏற்றுக்கொண்டு என்னிடத்தில் கற்றுக்கொள்ளுங்கள்""** என்று ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து மத். 11:29 — ல் நமக்கு சொல்கிறார். நம் வாழ்க்கையில் அநேக காரியங்களை கற்றுக்கொள்கிறோம், தெரிந்துகொள்கிறோம். அதன்படி நடக்கிறோம், நடக்காமலும் இருக்கிறோம். நம் வாழ்நாளில் எவ்வளவோ கற்றுக் கொண்டாலும் முக்கியமாய் கற்றுக் கொள்ள வேண்டியவைகளை இங்கு ஆண்டவர் குறிப்பிடுவது **""சாந்தமும் மனத்தாழ்மையும்""** தான்.

**சாந்தம்: —** மோசே பற்றி வேதத்தில் பார்க்கும்போது பூமியிலுள்ள சகல மனிதரிலும் மிகுந்த சாந்தகுணமுள்ளவன் என்றும் என் வீட்டில் எங்கும் உண்மையுள்ளவன் என்றும் கர்த்தர் சாட்சி கொடுக்கிறார். சாந்தகுணமுள்ளவர்களை கர்த்தர் உயர்த்துகிறார் என்று சங். 147:6 — ல் வாசிக்கிறோம். எனவே ஆண்டவர் நம்மை உயர்த்த வேண்டுமானால் நமக்கு சாந்த குணம் அவசியம். மட்டுமல்ல சாந்தகுணமுள்ளவர்கள் பூமியை சுதந்தரித்துக் கொள்வார்கள் என்றும் சாந்தகுணமுள்ளவர்களுக்கு கர்த்தர் தமது வழியை போதிப்பார் என்றும் சங். 25:9 — ல் பார்க்கிறோம். நமது ஆண்டவர் நீடிய சாந்தமுள்ளவர். நம்மை பாவத்திலிருந்து விடுதலையாக்கும்படிக்கு நமக்காக எல்லா உபத்திரவங்களையும் பாடுகளையும் ஏற்று தேவ ஆட்டுக் குட்டியாக உலகத்தின் பாவத்தை சுமந்து தீர்த்தார். மேலும் **""இயேசு நெருக்கப்பட்டும் ஒடுக்கப்பட்டும் இருந்தார், ஆனாலும் தம் வாயை அவர் திறக்கவில்லை""** (ஏசா. 53:7). நாமும் நம் ஆண்டவரிடத்தில் சாந்தகுணத்தை கற்றுக் கொள்ளவேண்டும்.

**மனத்தாழ்மை: —** **""கர்த்தருக்கு முன்பாக தாழ்மைப்படுங்கள் அப்போது அவர் உங்களை உயர்த்துவார்""** (யாக். 4:10). தரித்திரராய் இருந்த நம்மை ஐசுவரியவான்களாக்க, நம் நிமித்தம் ஐசுவரியராய் இருந்தவர் நமக்காக தரித்திரரானார் என்று 2கொரி. 8:9 — ல் குறிப்பிடபட்டுள்ளது.

அவர்தேவனனுடைய ரூபமாயிருந்தும் தம்மைதாமே வெறுமையாக்கி அடிமையின் ரூபமெடுத்து மனித சாயலானார். அதுமட்டுமல்ல மரண பரியந்தம் கீழ்ப்படிந்தவராகி தம்மை தாமே தாழ்த்தினார் (பிலி.2:7,8). நாம் தாழ்மையை அணிந்து கொள்ளும்போது கர்த்தர் நம்மை நோக்கிப் பார்க்கிறார். அதுமட்டுமல்ல தாழ்மையுள்ளவர்களுக்கு கிருபை அளிக்கிறார். தேவகுமாரன் கர்த்தருக்கு முன்பாக மனத்தாழ்மையுடன் இருந்ததினால் பிசாசை விரட்டினார். யாக். 4:7 — ல் **""தேவனுக்கு கீழ்படிந்திருங்கள், பிசாசுக்கு எதிர்த்து நில்லுங்கள் அப்பொழுது அவன் உங்களை விட்டு ஓடிப்போவான்""** என்று நமக்கு வேதம் கற்றுத்தருகிறது. 1பேது. 2:20 — 21 — ல் சொல்லியிருக்கிறபடி நீங்கள் நன்மை செய்து பாடுபடும்போது பொறுமையோடு சகித்தால் அதுவே தேவனுக்கு முன்பாக பிரீதியாயிருக்கும். இயேசு கிறிஸ்து நமக்காக பாடுபட்டு பொறுமையாய் எல்லாவற்றையும் சகித்தது போல அவருடைய அடிச்சுவடுகளை நாமும் பின்பற்றி நுகத்தை சுமந்து, சாந்தமும் மனத்தாழ்மையும் கற்றுக்கொள்வோம். கர்த்தருக்கே மகிமையுண்டாவதாக: ஆமென்.

**கர்த்தரின் அன்பில்**
**சகோ. சுகுமார்**

மறக்கமுடியுமா!

# மாம(பு)னிதர் பிரான்சிஸ் சேவியர் (1506-1552)

ஸ்பெயின் நாட்டில் நவாரே என்ற இடத்தில் பிரான்சிஸ் சேவியர் பிறந்தார். அவரின் தாய்மொழி பாஸ்க். வீராப்பும் தான் தோன்றிய வம்சத்தைப் பற்றிய பெருமையும் உயர் பரம்பரைக்கே உரிய ஏதேச்சாதிகாரமும் உடையவராக ஆரம்பத்தில் காணப்பட்டார். பின்பு இயேசு கிறிஸ்துவின் அன்பினால் தொடப்பட்டு அவருக்கே அடிமையானார். இளமைப் பருவத்தில் சாதனையாளனாக விளங்கவேண்டும் என்ற எண்ணமும் விளையாட்டுகளில் ஆர்வமும் அவர் உள்ளத்தில் மேலோங்கி நின்றது. இத்துடிப்புள்ள இதயத்தில் அன்பும், பிறருக்கு உதவும் தாராள மனப்பான்மையும் இழையோடியது. ஆகவே இயேசு கிறிஸ்துவை தன் நாயகராக ஏற்றுக் கொண்ட பின் அவரின் சகிப்புத் தன்மையும் வைராக்கியமான அன்பும் அவர் ஊழியத்தில் மேலோங்கி நின்றது. பாரீஸ் பல்கலைகழகத்தில் கல்விகற்று ஐந்துபேரோடே சேர்ந்து சொஸைட்டி ஆப் ஜீசஸ் என்ற ஸ்தாபனத்தை 1534 — ல் நிறுவி கடவுளுக்கு ஊழியம் செய்தார்.

1541 — ம் ஆண்டு பிரான்சிஸ் சேவியர் மேலும் இருவருடன் சேர்ந்து போர்ச்சுக்கல் நாட்டிலிருந்து கோவாவிற்கு 1542 — ம் ஆண்டு சென்றார். அங்கு சேர்ந்ததும் முதலில் அங்கு பேசப்பட்டு வந்த மொழியைக் கற்றபின் கிறிஸ்தவ விசுவாசத்திற்கு வந்தவர்களுக்கு போதனை கொடுக்கும்படியாக பாடங்களை எழுதினார். சிறைச்சாலைகளுக்கும் மருத்துவமனைகளுக்கும் சென்று தொழு நோயாளிகளுக்கு ஆராதனை நடத்தினார். தெருக்கள் வழியாக மணியொன்றை அடித்துக்கொண்டு சிறுவர்களை வகுப்புகளுக்கு வரும்படி அழைப்பது இவரது அன்றாட பணிகளில் ஒன்று. வேதாகம வசனங்களை மக்களின் தாய் மொழியில் எழுதி அவற்றுக்கு இசை கொடுத்து மாணவர்களைப் பாடச் செய்து, கிறிஸ்தவ நம்பிக்கையை அவர்களுக்கு போதித்தார். இந்தபாடல்கள் மக்களிடம் ஈர்க்கும்படியாக அமைந்தது. எங்கும் உற்சாகமாக பாடப்பட்டன. கோவாவில் வாழ்ந்த ஐரோப்பியர்களுக்கும் அயராது இயேசு கிறிஸ்துவின் போதனைகளை பிரான்சிஸ் சேவியர் அறிவித்து வந்தார். இவர் கோவா ஊழியத்திற்கு பிறகு தென்னிந்தியாவிலுள்ள மணப்பாடு கன்னியாகுமரி தூத்துக்குடி பகுதிகளுக்கு சென்று மீன் பிடிக்கும் மக்கள் மத்தியில் ஊழியம் செய்தார் அப்பகுதிலுள்ள சிறுவர்களுக்கு இயேசு போதித்த ஜெபம், பாவ அறிக்கை போன்றவற்றை மனப்பாடம் செய்வித்து கற்பிக்கச் செய்தார். இவரது தோற்றம் மக்களை அதிகம் கவர்ந்தது. திருவாங்கூர் பகுதியில் முக்காவர் மக்கள் மத்தியிலும் அவர் ஊழியம் செய்தார். அவருடன் இரண்டு ஐரோப்பிய பாதிரியார்களும் இரண்டு குகோவா பாதிரிமாரும் இணைந்து ஊழியம் செய்தனர்.


கொச்சியில் ஊழியம் செய்து கொண்டிருந்த போது 1545 — ம் ஆண்டு ஒரு பயணியின் மூலம் இந்தோனேசியாவிற்கு சென்று மிஸினெரி ஊழியம் செய்தார். 1545 முதல் 1547 வரை மலாக்கா (போர்ச்சுக்கீஸ் காலனி) பகுதியில் தன் பணியை நிறைவேற்றி மலாய் பகுதிகளுக்கும் சென்றார். அதுமட்டுமல்ல ஜப்பானில் முதலாவது சுவிசேஷத்தை அறிவித்து 2000 விசுவாசிகளை உருவாக்கினார். மாபெரும் உலகம் தனக்கு முன்பாக இருப்பதை பிரான்சிஸ் உணர்ந்து அந்த உலகை தேவனுக்கு

இயேசு எழுந்திருந்தபின்பு மகதலேனா மரியாளுக்கு முதல்முதல் தரிசனமானார். —மாற். 16:9

ஆதாயம் செய்வதே தன் தலையாய கடமை என எண்ணி உழைத்தார். அன்றைய சமுதாயத்தையோ அரசியல் அமைப்பையோ இறையாண்மை அமைப்பையோ அவர் குறை கூறவில்லை. பிரான்சிஸ் சேவியர் உலகப் பற்று இல்லாதவராக வாழ்ந்தார். தரித்திரத்தில் வாழ்வதை தெரிந்துகொண்டார். தன்னை தேடி வந்த அநேக வாழ்க்கை வசதிகளை ஏற்க மறுத்தார். கடுங்குளிரையும் வெயிலையும் பொருட்படுத்தாமல் நீண்ட கடல் பயணத்திலும் மிகவும் மோசமான சூழ்நிலைகளையும் சந்தித்தார். பிணியாளிகளையும் ஏழைகளையும் தேடிச் சென்று அவர்களுக்கு பணிவிடை செய்தார். தேவையிலுள்ள மக்களுக்கு உதவி செய்வது, அகதிகளாக வருவோர்க்கு புணர் வாழ்வு அமைப்பது, அமைதியற்ற இடங்களில் சமாதானம் கொண்டுவருவது போன்றவைகள் அவருடைய பணியாய் இருந்தது. சீனாவுக்கு எப்படியும் சுவிசேஷத்தை சொல்லவேண்டும் என்னும் வாஞ்சையோடு கப்பல் மாலுமியின் உதவியுடன் அந்நாட்டில் நுழைந்தார் அங்கு கொடிய ஜுரம் வந்து டிசம்பர் 3 – ம் தேதி 1552 – ம் ஆண்டு கொடிய காய்ச்சலுக்கு பலியானார். அவருடைய உடல் கோவாவில் பாதுகாக்கப்பட்டு வருகிறது. இந்தியாவில் கத்தோலிக்கத் திருச்சபை தழைத்து செழிக்கக் காரணமாய் விளங்கியவர்களில் சிறப்புமிக்க இடம் பிரான்சிஸ் சேவியருக்கு உண்டு.

**அன்புள்ள சகோதரி**
**பத்மினி வர்க்கீஸ்**

---



## மார்ச் மாதக் கேள்விகளுக்கு பதில்கள்

1. பிலதெல்பியா (வெளி. 3:7 – 8)
2. பிசாசு / சாத்தான் (வெளி. 3:7)
3. தேவனுடைய மகிமையினாலும் அவருடைய வல்லமையினாலும். (வெளி. 15:8)
4. வெட்டுக்கிளி (வெளி. 9:7)
5. சகலவித இரத்தினங்களினாலும் (வெளி. 21:19 – 20)
6. உலகத்தோற்றமுதல் அடிக்கப்பட்ட ஆட்டுக் குட்டியினுடைய ஜீவபுஸ்தகத்தில் பேரெழுதப்பட்டிராத பூமியின் குடிகள்யாவரும் அதை வணங்குவார்கள். (வெளி. 13:8)
7. ஒருவனும் பாத்திரவானாகக் காணப்படாததினால் (வெளி. 5:4)
8. உடன்படிக்கையின் பெட்டி (வெளி. 11:19)
9. வேசிகளுக்கும் பூமியிலுள்ள அருவருப்புகளுக்கும் தாய் (வெளி. 17:5)
10. இலட்சத்து நாற்பத்து நாலாயிரம் பேர் (வெளி. 7:4)
11. மரணமும் பாதாளமும் (வெளி. 20:14)
12. அது தேனைப்போல மதுரமாயிருந்தது (வெளி. 10:10)
13. சீயோன் மலை (வெளி. 14:1)
14. மரணம் / பாதாளம் (வெளி. 6:8)
15. தியத்தீரா சபையின் (வெளி. 2:18 – 19)

சபைக் குயில்

# கிறிஸ்தவன்

சர்ச்சுக்கு போகிறதால் மட்டுமல்ல...
சத்தியத்தின்படி வாழுகின்றவனே கிறிஸ்தவன்.
கிறிஸ்தவ பெயரை தாங்கினவன் அல்ல...
கிறிஸ்துவின் சாயலை பிரதிபலிப்பவனே கிறிஸ்தவன்.
கிறிஸ்தவ குடும்பத்தில் பிறப்பதனால் அல்ல...
பரிசுத்த ஆவியினால் கிறிஸ்துவுக்குள் பிறந்தவனே கிறிஸ்தவன்.
ஆலயம் சென்று ஆராதிப்பதனால் மட்டுமல்ல...
தன்னையே தேவன் தங்கும் ஆலயமாக்கியவனே கிறிஸ்தவன்.
தினமும் வேதம் வாசிப்பவன் மட்டும் அல்ல...
வாசித்தபடி வாழ்ந்து நிற்பவனே கிறிஸ்தவன்.
தேவைக்காக ஜெபிப்பவன் அல்ல...
தேவ உறவிற்காக ஜெபிப்பவனே கிறிஸ்தவன்.
காணிக்கைகளை வழங்குவதால் மட்டும் அல்ல...
தன்னையே தேவனுக்கு காணிக்கையாக்குகிறவனே கிறிஸ்தவன்.
கிறிஸ்தவ போதனைகளை நம்புகிறவன் மட்டுமல்ல...
கிறிஸ்தவ போதனைகளின்படி வாழ்கிறவனே கிறிஸ்தவன்.
இயேசுவின் வருகையை நம்புகிறவன் மட்டும் அல்ல...
இயேசுவின் வருகைக்கு ஆயத்தப்பட்டவனே கிறிஸ்தவன்.

**- சகோ. செல்வகுமார்**

## போ அல்லது அனுப்பு

நமது சபையின் மூலமாகத் தாங்கப்படும் இந்திய தேச ஊழியங்களை அறிய, தங்களுடைய நன்கொடைகளினால் தாங்க விரும்புவோர் தொடர்பு கொள்ளவேண்டிய பொறுப்பாளர்.

சகோ. சிவகுமார் – போன்: 94494541

நமது சபையின் மூலமாகத் தாங்கப்படும் திக்கற்ற பிள்ளைகள் ஊழியங்களை அறிய, தங்களுடைய நன்கொடைகளினால் தாங்க விரும்புவோர் தொடர்பு கொள்ளவேண்டிய பொறுப்பாளர்.

சகோ. ரவிஜாண் பீட்டர் – போன்: 99460225

அவர் இங்கே இல்லை: தாம் சொன்னபடியே உயிர்த்தெழுந்தார். -மத். 28:6

# எது மேன்மை!

சீரப்பிரகாரமான கையால் செய்யப்படுகிற யூதர்கள் விருத்தசேதனத்தைக் குறித்து மேன்மை பாராட்டினார்கள். ஆனால் ரோம. 2:28 – 29 சொல்கிறது **""புறம்பாக மாம்சத்தில் செய்யப்படும் விருத்தசேதனமும் விருத்தசேதனமல்ல, எழுத்தின்படி உண்டாகாமல் ஆவியின்படி இருதயத்தில் உண்டாகும் விருத்தசேதனமே விருத்தசேதனம்""**.

இன்றைய உலகில் மனிதர்கள் தங்கள் சீரீ பலத்தைக் குறித்து, அழகை குறித்து, அந்தஸ்தைக் குறித்து, ஞானத்தைக் குறித்து, செல்வத்தைக் குறித்து மேன்மை பாராட்டி வருகிறார்கள். உலக பலம் ஒரு மனுஷனுடைய இருதயத்தில் **""பெருமை""** என்கிற வியாதியைக் கொடுத்து அவனை அழிக்க முயற்சிக்கிறது. **""தேவன் பெருமையுள்ளவர்களுக்கு எதிர்த்து நிற்கிறார், தாழ்மையுள்ளவர்களுக்கோ கிருபை அளிக்கிறார்""**(யாக். 4:6).இன்று அநேகர் தங்களுடைய செல்வாக்கை, சீரப் பிரகாரமானகாரியங்களைக்குறித்து மேன்மை பாராட்டுகிறார்கள். சகோதரனே!சகோதரியே! நீ எதைக் குறித்து மேன்மை பாராட்டுகிறாய்? சங். 20:7 – 8 சொல்கிறது **""சிலர் இரதங்களைக்குறித்தும், சிலர் குதிரைகளைக்குறித்தும் மேன்மை பாராட்டுகிறார்கள்ஹ நாங்களோ எங்கள் தேவனாகிய கர்த்தருடைய நாமத்தைக்குறித்தே மேன்மைபாராட்டுவோம்""**. கர்த்தர் நம்முடைய இருதயத்தைப் பார்க்கிறார். விருத்தசேதனம் பண்ணப்பட்டிருக்கிறதா! என்று. இல்லையென்றால் கர்த்தருக்கு பிரியமில்லாத காரியங்களை, மேட்டிமையான எண்ணங்களை, சீரமுயற்சிகளை வெட்டிஎறிவோம். கொலோ. 2:11 சொல்கிறது, **""அல்லாமலும் நீங்கள் கிறிஸ்துவை பற்றும் விருத்தசேதனத்தினாலே மாம்சத்துக்குரிய பாவ சீரத்தைக் களைந்துவிட்டதினால் கையால் செய்யப்படாத விருத்த சேதனத்தை அவருக்குள் பெற்றீர்கள்""**.

உலக பெருமை நமக்கு வேண்டாம். கர்த்தருக்கு பிரியமானதை செய்ய நம்மை அர்ப்பணிப்போம். ஞானி தன் ஞானத்தைக் குறித்து மேன்மை பாராட்ட வேண்டாம், பராக்கிரமன் தன் பராக்கிரமத்தைக் குறித்து மேன்மை பாராட்ட வேண்டாம், ஐசுவரியவான் தன் ஐசுவரியத்தைக் குறித்து மேன்மை பாராட்ட வேண்டாம், மேன்மை பாராட்டுகிறவன் பூமியிலே கிருபையையும், நியாயத்தையும், நீதியையும் செய்கிற கர்த்தர் நான் என்று என்னை அறிந்து உணர்ந்திருக்கிறதைக் குறித்தே மேன்மை பாராட்டக்கடவன் என்று கர்த்தர் சொல்கிறார், இவைகளின் மேல் பிரியமாயிருக்கிறேன் என்று கர்த்தர் சொல்கிறார் (எரே. 9:23 – 24). நமக்காக சிலுவையில் மரித்து உயிர்த்தெழுந்த இயேசுவை குறித்தே நாம் மேன்மை பாராட்டுவோம். **""நானோ நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் சிலுவையைக் குறித்தேயல்லாமல் வேறொன்றையுங்குறித்தும் மேன்மை பாராட்டாதிருப்பேனாக""** (கலா. 6:14).

""என் அருள்நாதா இயேசுவே
சிலுவைக்காட்சி பார்க்கையில்
பூலோக மேன்மை நஷ்டமே
என்றுணர்ந்தேன் என் உள்ளத்தில்""

**கிறிஸ்துவுக்குள் அன்புடன்**
**சகோ. கிறிஸ்டோபர் தேவராஜ்**

# ஊழியம் செய்ய இவர்களுக்காக ஜெபிக்கிறீர்களா!

**தலைவர்**
சகோ. ரவிச்சந்திரன்
66889706 / 23913675

**செயலாளர்**
சகோ. ஸ்டாலின்
66021072

**பொருளாளர்**
சகோ. விசு
97686317

**பெண்கள் ஐக்கிய தலைவி**
Sis. ஜெபக்கொடி ஜான்வெஸ்லி
99145593 / 23731904

**வாலிப ஐக்கிய தலைவர்**
சகோ. அற்புதராஜ்
60692485

# HAPPY EASTER

## நமது சபையின் கேம்ப் ஊழியத்தில் Rev. ஹாரிசன் சின்னக்குமார்





**சபையின் அஞ்சல் பெட்டி விலாசம்**

**——(Your Name), P.Box No-46795, 64018-Fahaheel, Kuwait**

ஜெப விண்ணப்பங்களை அனுப்புவீர்களானால் உங்களுக்காக ஜெபிக்கிறோம்

**Church website: www.ahmaditamilcongregation.org**
**Church E-mail ID: ahmaditamil.kw@hotmail.com**

சபையின் வாகனத் தேவையின் அழைப்புக்கு: 65868048

**Private Circulation only**